

நாகை மாவட்டம் நாகை நம்பியா நகரைச் சேர்ந்த மீனவர்கள் வேதாரண்யம் கோடியக்கரை அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடல் கொள்ளையர்கள் மூன்று படையில் சென்ற மீனவர்களை தாக்கி அவர்களிடம் இருந்த மீன் பிடி உபகரனங்களை சூறையாடி சென்றனர். இலங்கை கடற் கொள்ளையர்கள் தாக்குதலில் பலத்த காயமடைந்த 11 மீனவர்கள் நாகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெற்று வரும் மீனவர்களை நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட கழகப் பொருளாளர் மு. லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் நகர மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ். சத்தியன் மற்றும் மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் மற்றும் பலர் உள்ளனர்.

# அம்மாப்பேட்டை உணவுப் பகுப்பாய்வு ஆய்வகம் திறப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்பு!

சேலம், அக். 8-

சேலம், அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பங்கேற்றார்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (06.10.2025) காணொ லிக் காட்சி வாயிலாக சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டை உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் அதிநவீன உயர் ரக உபகரணங்கள், அயோத்தி தாச பண்டிதர் குடியி ருப்புப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் காரிப்பட்டி, வெள்ளாள குண்டம், நடுவலூர் ஆகிய கிராமங்களுக்கு ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் அறிவு சார் மையங்கள், நபார்டு திட்டத்தின் கீழ் மாட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடம் என மொத்தம் ரூ.12.29 கோடி மதிப்பீட்டிலான 5 திட்டப் பணிகளை திறந்து வைத்தார். இதனைத்தொடர்ந்து, சேலம், அம்மாப்பேட்டை, உணவு பகுப்பாய்வு ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். அந்தவகையில் இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் சேலம், அம்மாப்பேட்டை உணவு பகுப் பாய்வு ஆய்வகத்தில் அதிநவீன உயர் ரக உபகரணங்களான LCMS/MS (Liquid Chromatography Tandem Mass Spectrometry) மற்றும் GCMS/MS (Gas Chromatography Tandem Mass Spectrometry) இந்த சாதனங்கள் மூலம் உணவு பொருட்களில் கலந்து உள்ள பயிர் மாசுகள் முறையே பூச்சி கொல்லிகள், பூஞ்சானங்கள் மற்றும் பிற நச்சு பொருட்கள் ஆகியவற்றை மிக துல்லியமாக கண்டறிந்து உணவு பொருள்களின் தரத்தை கண்டறியும் உபகரணங்களை திறந்து வைத்தார்கள்.

மேலும், LC ICPMS (Inductively Coupled Plasma Mass Spectrometry) சாதனம் மூலம் உணவுப் பொருட்களில் சுற்றுசூழலில் காணப்படும் மனித ஆரோகியத்திற்க்கு தீங்கு விளைவிக்கும் கனரக உலோகங்களான ஆர்செனிக், ஈயம், பாதரசம், குரோமியம் போன்ற உலோக மாசுக்களை துல்லியமாக கண்டறிந்து உணவு பொருட்களின் தரத்தை கண்டறியும் உதவும் உபகரணமும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மாட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடமும், அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புப் பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் வாழப்பாடி வட்டம், காரிப்பட்டி கிராமத்தில் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் கிராம அறிவு சார் மையமும், வெள்ளாளகுண்டம் கிராமத்தில் ரூ.77.89 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு சார் மையமும், கெங்கவள்ளி வட்டம், நடுவலூர் கிராமத்தில் ரூ.77.89 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு சார் மையமும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு பகுப்பாய்வாளர் எஸ்.நரசிம்மன், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், அம்மாபேட்டை மண்டலக் குழு தலைவர் கே.டி.தனசேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை. அக். 8-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 03.10.2025 அன்று திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் ஊரகப் பகுதிகளுக்கு தேவையான, குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, மின் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப் பட்டு வருகிறது. அந்தவகையில் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதன்படி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நகரப்பட்டி விநாயகர் திருக்கோவில் அருகில் உள்ள குளத்தை சுற்றி கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவரினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

மேலும், நல்லூர் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சிறு மின் விசை மோட்டார் பம்பு, நல்லூர் ஊராட்சி, சுந்தரம் நகர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கக் தொட்டி ஆகியவற்றையும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத் திட்டங்களை பொதுமக்கள், மாணாக்கர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங், பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆர்.பாலசுப்ரமணியன், பி.வெங்டேஷன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. ஒன்றிய நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மத்திய ஒன்றிய தி.மு.க சார்பில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் புதுகை பூபாலன் குழுவினர் நகைச்சுவையாக நாட்டு நடப்புகளை பாடல்கள் மூலமாகவும், கதைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தனர். இதில் மத்திய ஒன்றியச் செயலாளர் உள்ளூர் டி.கணேசன் தலைமை வகித்தார், கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, ஒன்றியச் செயலாளர்கள் ஜெ.சுதாகர், சுந்தர.ஜெயபால், பேரூர் செயலாளர் ஜப்ருதீன், தலைமைக் கழக பேச்சாளர் குடந்தை ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் அரசு கல்லூரியில் ரூ.78 கோடியே 33 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்லூரி மாணவர்களுக்கான சமூக நீதி விடுதியை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு, கல்லூரி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கோட்டாச்சியார் குணசேகரன், கல்லூரி முதல்வர் சுபாஷினி மற்றும் மு.திராவிடமணி, ச.இளஞ்செழியன், காசிலிங்கம், செல்வராஜ், ஜபருல்லா, தமிழழகன், ரசாக் குமார் நாகராஜ், மாங்காடு ராஜா, உத்தமன், லியாகத் அலி, அமிர்தலிங்கம், சுப்ரமணி, செல்வரத்தினம், நகரமன்ற தலைவர் பரிமளா, திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், தலைமைக் கழக பேச்சாளர் மு.பாண்டியராஜ் உட்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஏமாற்றும் அரசியல்வாதிகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்படுவார்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகம் திரளும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!



அரியலூர், அக்.8-

அரியலூரில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

கரூரில் கடந்த 27ஆம் தேதி த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு பயணம் பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 41 பேர் உயிரிழந்த நிலையில் மாற்றுக் கட்சியினர் இறந்திருந்தாலும், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற, அந்த பொறுப்புணர்வோடு, அவரே, அவருடைய காணொளியில் சொன்னது போல, தமிழ் உறவுகள் என்ற அடிப்படையில், இரவே வந்து, அவர்களை பார்த்து, ஆறுதல் சொல்லி, இறந்தவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவர்களுக்கான நிவாரணத்தையும் வழங்கினார்.

ஆனால், அந்த ரசிகர்களை யார் கூட்டினாரோ, யார் அவர்களுக்கு, தன்னை தலைவர் என்று சொல்லிக் கொண்டு, அந்த கூட்டத்தில் பேசினாரோ, அந்த இறப்புக்கெல்லாம் யார் காரணமோ, அவர் தெறித்து ஓடிவிட்டார், சென்னைக்கு. ஆனால், இன்றைக்கு ஒரு வீடியோ வெளியிடுகிறார், அனுதாபம் தேடுகின்ற வகையில்.

ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள் அந்தச் சம்பவம் நடந்தவுடன், அங்கிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்கள், இன்னும் சொல்லப் போனால், அ.தி.மு.க.வின் பொறுப்பாளர்கள் கூட, அங்கே வந்திருந்து, அவர்களுக்கான உதவியை செய்தார்கள். அதே போல, முதலமைச்சர் அவர்களோடு, அமைச்சர்களும், அங்கே இருந்து, அந்த களத்திலே பணியாற்றுகின்ற, காட்சியை, பார்த்திருக்கிறோம்.

ஆனால், இந்த நிமிடம் வரை, எந்த கட்சி, அந்த கூட்டத்தை நடத்தியதோ, அந்தக் கட்சி நிர்வாகிகள் யாரும், அந்த மருத்துவமனைக்கும் செல்ல வில்லை. யாரையும் பார்த்து, ஆறுதலும் சொல்லவில்லை. யாருக்கும் உதவியும் செய்யவில்லை. இப்படிப்பட்ட ஒரு, அவலமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஏற்படுத்திவிட்டு, அதை வைத்து, தமிழ்நாட்டு அரசியலில், ஒரு கலவரத்தை, உண்டாக்குவதற்கான, திட்டத்திலே இறங்கி இருக்கிறார்கள்.

அந்த கட்சியினுடைய ஒரு முக்கிய நிர்வாகியாக, அறிவிக்கப்பட்டிருக்கின்ற, ஆதவ் அர்ஜுனா என்ற நபர், அந்த கட்சியை நடத்துவதற்கு, அவர்தான் பணம் கொடுப்பதாக கூட, தகவல் இருக்கிறது. அவர் ஒரு, ட்விட்டை இரவு வெளியிடுகிறார். அதில் லடாக்கில் நடந்தது போல, நேபாளில் நடந்தது போல, புரட்சி வெடிக்க வேண்டும் என்று சொல்கிறார். நேபாளத்திலும், லடாக்கிலும், அங்கே இருக்கின்ற பிரச்சினை என்ன? அதற்கான சூழல் என்ன? என்பதை, மக்கள் அறிவார்கள் தமிழ்நாட்டில், இவர்கள் கட்சி செய்த தவறுக்காக, அதை மறைப்பதற்கு, அதை காரணமாக வைத்து, ஒரு கலவரத்தை, ஏற்படுத்த வேண்டும் என்று, நினைக்கிறார் என்றால், அவர், இந்த தேசத்தினுடைய, பாதுகாப்பிற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும், மாநிலத்தின் பாதுகாப்பிற்கும், குந்தகம் விளைவிக்கின்ற, நடவடிக்கையில் தான், இறங்கினார்.

எனவே, இந்த நபருடைய, இந்த செயலானது, தேசவிரோத செயல். இதை கண்டிக்க வேண்டிய ஒன்றிய அரசோ, அல்லது ஒன்றிய அரசு நிர்வாகிகளோ, அதில் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்றால், அதற்கு பின்னணியில் அவர்கள்தான் இருந்து, இயக்குகிறார்களோ? என்கின்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, ஒரு தலைவன் என்பவன், தன்னை நம்பி வந்தவர்களுக்காக, முதலில் களத்தில் நிற்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த நேரத்தில் எல்லாம், சோதனையை சந்தித்ததோ, அந்த சோதனைகளின் போதெல்லாம், தொண்டர்களோடும், மக்களோடும் நின்றவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

அதேபோல்தான், இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற, தளபதி அவர்களும், சென்னை வெள்ளம் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே, எங்கு வெள்ளம் ஏற்பட்டாலும், பாதிப்பு ஏற்பட்டாலும், அங்கே போய், களத்தில், முதலில் நபராக மக்களின் காவலராக நிற்பவர், அவராகத்தான் இருப்பார், இருந்தார், கொரோனா உச்சத்தில் இருந்தபோது, யாரும், அந்த கொரோனா நோயாளிகளை, சந்திக்க, துணியாத போது, அவர்தான், முதலில் மருத்துவமனைக்கு சென்று அவர்களை சந்தித்து, ஆறுதல் சொல்லியவர், நான் இருக்கிறேன் கவலைப்படாதீர்கள், உங்களுக்கு எதுவும் ஆகாது. நான் பார்த்துக் கொள்கிறேன் என ஆறுதலும், நம்பிக்கையும் அந்த மக்களுக்கு தந்தவர் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

எனவே, இப்பொழுதும், அதே மனிதாபிமான அடிப்படையில், அதே, கடமை உணர்வோடு, அவர், மக்களை சந்திக்க வந்தார். அவர், இதேபோல் எப்போதும் களத்தில் இருப்பார். எனவே, அவர் பின்னால், தமிழகம் திரளும். இந்த ஏமாற்ற அரசியல்வாதிகள், நிச்சயமாக, மக்கள் முன், அம்பலப்பட்டு நிற்பார்கள்.

தன்னுடைய பாதுகாப்புக்கு விஜய் இப்பொழுது, அங்கே போய் நிற்கிறார். எந்த பா.ஜ.க.வை எதிர்ப்பேன், எந்த பா.ஜ.க.வினர், பாசிசத்தை எதிர்ப்பேன் என்று சொன்னாரோ, அவரிடத்திலே, அவர் மண்டியிட்டு நிற்கின்ற, ஒரு நிலைமைதான், இன்றைக்கு வந்திருக்கிறது. எனவே, நாங்கள் ஏற்கனவே சொல்லி வந்தோம். பா.ஜ.க.வுடைய கைக்கூலிகள்தான் விஜய் என்று.

இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலிலே, பலரும் களம் இறக்கப்பட்டு இருக்கிறார்கள். அது வெளி தெரிய வருகின்ற காலம் வந்து விட்டது .தனி நபர் ஆணையம் விசாரணை நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் அறிக்கை வந்துவிடும் தவறு செய்தவர்கள் நிச்சயமாக 41 பேர் இறந்ததற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும், தண்டனை நிச்சயம் உண்டு என செய்தியாளர்களிடம் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.



புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து, புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 12 13 க்கு உட்பட்ட காமராஜபுரம் 12ம் வீதியில் நூலக கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழாவில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகர மேயர் செ. திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை தெற்கு மாநகரம் 18வது வார்டு த.வெ.க. கட்சியைச் சார்ந்த எம்.பிரபு என்பவர் அக்கட்சியில் இருந்து விலகி தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையேற்று புதுக்கோட்டை தெற்கு மாநகர திமுக பொறுப்பாளர் வே.ராஜேஷ் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்து கொண்டார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா, மாநகர துணைச் செயலாளர் வி.பி. ரெங்கராஜன் , வட்ட கழக செயலாளர்கள் க.செல்லையா , கண்மணி சுப்பு, மாமன்ற உறுப்பினர் பழனிவேலு, மதியழகன், ஹரிஹரன், தன்வீர் முகமது, பாண்டிச்செல்வம் , ராகவன் ஆதிமூலம் மற்றும் 18வது வட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.